(ஆ) அவைகளுக்காக செலுத்தப்படும் ஆண்டு வாடகை எவ்வளவு?

(இ) சென்னை அண்ணாசாலையில் உள்ள ராயாலா கார்ப்பரேஷன் பில்டிங்''ல் இயங்கும் மின்சார இலாகா அலுவலகத்தின் மாத வாடகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 46.

(ஆ) ரூ. 12,28,704.

(இ) ரூ. 24,350.

திரு. அ. செல்வராசன்: தலைவர் அவர்களே, ரயோலா கார்ப்பரேஷனுககுச் சொந்தமான இடத்திற்கு 24,350 ரூபாய் வாடகையாக கொடுத்து வருகிறோம். இதைக் கருத்திற்கொண்டு சொந்தக் கட்டிடங்களிலே அலுவலகங்களை நடத்துவதற்கு ஏற்ற வகையில், மாநகராட்சிக்குச் சொந்தமான, ஆனந்தா தியேட்டருக்கு எதிரில் இருக்கும் இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்தில் புதிதாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், ஒரு பத்து மாடி கட்டடம் ஒன்றை கட்டுவதற்கான திட்டமிட்டு வேலை நடைபெற்று வருகிறது.

திரு. அ. செல்வராசன்: இவ்விதம் கட்டப்படும் கட்டடம் எந்த இடத்தில் கட்டப்படும். நான் சொல்லுகின்ற இந்த இடத்தில் பத்து அல்லது பதினைந்து மாடிகள் கொண்ட கட்டடம் கூடக் கட்டலாம். ஆகவே நான் சொல்லுகின்ற இந்த இடத்தில் கட்டடம் கட்டுகின்ற ஆலோசனையை அரசு ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இது சம்பந்தமான விவரங்களை எல்லாம் தருவார்களேயானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

*322 வினா— திரு. டி. எம். தைலப்பன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பன்மாடிக் கட்டடம் கட்டும் செயல் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்சார வாரியத்தின் பன்மாடிக் கட்டடம், அஸ்திவார வேலைகள் முடிந்து, மேல் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. டி. எம். தைலப்பன்: இப்போது பன்மாடி கட்டடம் கட்டும் நிலை எந்த நிலையில் உள்ளது என்பதை அரசு அறிவிக்குமா

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அஸ்திவாரம் போட்டாகிவிட்டது. மேற்கொண்டு கட்டிட வேலை 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ம் தேதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் மதிப்பு 94.75 இலட்சம் ரூபாய்.

## கேனல் சூப்பிரண்டுகளது சம்பளம்.

*323 வினா— திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை தொகுதியைச் சார்ந்த கேனல் சூப்பிரண்டுகளுக்கு அடிப்படைச் சம்பளம் தலைமை லஸ்கர்களை விடக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) கேனல் சூப்பிரண்டுகளின் சம்பள ஏற்ற முறையை அரசு பரிசிலனை செய்து அரசு ஆணை எண். 209, பொதுப் பணித் துறை, நாள் 16—2—78-ல் ரூ. 140—3—155—4—175—5—210-லிருந்து ரூ. 160—5—240 ஆக நிர்ணயம் செய்துள்ளது.

## மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு.

*324 வினா— திரு. என். கிட்டப்பா : திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை நிறுவும்படி மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபை அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அரசு மேற்கொண்ட முடிவு யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMYMUDALIAR : (a) Yes.

(b) Sitting up of a Bench of the High Court of Madras at Madurai involves Parliamentary Legislation. This Government have addressed the Government of India to take immediate action on this. The decision of the Government of India in this regard is awaited.

The Government of India have requested this Government to obtain and forward the views of the present Chief Justice on the proposal. The High Court has been addressed.